பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

பக்கங்கள் எட்டு

விலை ரூபா 5.00

வலம்புரி
VALAMPURI

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 புரட்டாதி 17 செவ்வாய்க்கிழமை (03-10-2000) தொ. பேசி:- 3378 ஒலி: 288

நாளை
க.பொ.த (சா/த) மாணவருக்கான
கணிதம் பகுதி 1

★ மூதூர் ஓட்டோ குண்டுவெடிப்பில்

# பொது ஜ. ஐ. முன்னணி வேட்பாளர் உட்பட 20பேர் கொல்லப்பட்டனர்!

## 50பேர் காயம்; 10பேர் கவலைக்கிடம்

(மூதூர் விசேட நிருபர்)

மூதூரில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் பொதுஜன ஐக்கிய முன்னணி வேட்பாளர் எச். எல். எம். உபைதுல்லா உட்பட 20பேர் கொல்லப்பட்டுள்ளனர். சுமார் 50 பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் 10 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. கொல்லப்பட்டோரில் 18 பேரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

நேற்று மாலை 6.45 மணியளவில் மூதூர் கலாசாரமண்டபத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றி விட்டு வெளியேவந்து 'ஓட்டோ'வில் ஏற முற்பட்ட போதே இக் குண்டு வெடித்துள்ளது.

இக் குண்டு வெடிப்பில் காயமடைந்த 50பேரும் மூதூரில் இருந்துதிருமலைக்கு படகுகள் மூலம் கொண்டு செல்லப்பட்டு திருமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இக் குண்டு வெடிப்புச் சம்பவத்தை அடுத்து மூதூர்ப் பகுதியில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு பாரிய தேடுதல் வேட்டை நடைபெறுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வ)

## ஓட்டோவில் வைத்த குண்டே வெடித்தது?

குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட எச். எல். எம். உபைதுல்லா தற்கொலைக் குண்டுதாரியால் கொல்லப்பட்டாரா? அல்லது ஓட்டோவில் ஏற்கனவே பொருத்தப்பட்டிருந்த குண்டு வெடித்ததனால் கொல்லப்பட்டாரா? என்பதில் பலத்த சந்தேகம் எழுந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஓட்டோ சாரதி உட்பட குண்டு வைத்த இடத்திலிருந்த அனைவரும் கொல்லப்பட்ட (8 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை நாசகார பிரிவின் பொறுப்பாக இருந்தவர்

குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த பொதுஜன ஐக்கிய முன்னணி வேட்பாளர் எச்.எல்.

## தேர்தல் வன்முறைகள் 900ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தலுக்கான நியமனப் பத்திரம் தாக்கல் செய்த கடந்தமாதம் 4 ஆம் திகதி முதல் நேற்று வரை 900 தேர்தல் வன்முறைகள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் தலைமையகப் பிரிவின்சிரேஷ்ட அத்தியட்சகர் எம். பி. நாபன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் எதிர்வரும் பொதுத்தேர்தல் வன்முறைகள் மேலும் வெடிக்கலாம் என்றும், குருநாகல் மாவட்டத்திலேயே அதிகளவு வன்முறைகள் இடம் பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (ந-4)

## இளைஞன் விடுதலை

அவசரகால தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் வவுனியா நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்புஞானசூரியன் சதுக்கத்தைச் சேர்ந்த இராமச்சந்திரன் யோகராசா (வயது 24) என்பவரே இவ்வாறு விடுதலை செய்யப்பட் 8 ஆம் பக்கம் பார்க்க)

★குண்டுத் தாக்குதலில் இருந்து

## பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா 2.வது தடவை உயிர்தப்பினார்

(ஏறாவூர்)

பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாவின் வாகனத்தொடர் அணி மீது இரண்டாவது தடவையாக நேற்று நடத்தப்பட்ட சைக்கிள் குண்டுத்தாக்குதலில் அமைச்சர் தெய்வாதீனமாக உயிர்தப்பினார்.

இக் குண்டுத் தாக்குதலை அடுத்து இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 14 வயது சிறுவன் ஒருவன் பலியானான் அவனுடைய தந்தை காயமடைந்தார்.

அமைச்சருக்கு பாதுகாப்பாக சென்ற பொலிஸ் உத்தியோகத்தரின் ஜீப் வண்டிதாக் (8 ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் ஷெல் வீச்சினால்

குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த பொதுஜன ஐக்கிய முன்னணி வேட்பாளர் எச்.எல். எம். உபைதுல்லா கடந்த 10வருடங்களாக திருமலை நாசகார பொலிஸ் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரியாக கடமையாற்றியவர் எனத் தெரியவந்துள்ளது.

அவர் கடமையாற்றிய காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான பல நடவடிக்கைகளில் (8 ஆம் பக்கம் பார்க்க)

## குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டோர்

குண்டு வெடிப்புச் சம்பவத்தில் கொல்லப்பட்டோர் விபரம் வருமாறு,

எம். கே. தளீர், ரி. கே. ஜெஸீம் (ஆசிரியர்), பி.எம். பளீர், எம்.ஐ. தௌஹி, ஜே. மறுத்தூர், எவ். ஏ. யூசுப், கே. ஏ. நியாஸ், எஸ்.எம், முதீன், ஏ.கே. உவைதி, எம்.ஏ. ஜமீல், எம். தாஹீர், எம்.எச். யலீல், எவ்.எம். முஜீப், வி. கே. அமிர்ஹாதியா, ஏ.எம். நளீர், எம். எம். யூசுப்கான், ஜே. முபறக்.

(வ-108)

## தெல்லிப்பழையிலிருந்து ஷெல் வீச்சு நோயாளர்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழைப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் படையினர் தென்மராட்சிப் பகுதியை நோக்கி நேற்று பரவலாக 'ஆட்லறி ஷெல்' தாக்குதலை மேற்கொண்டனர்.

படையினர் மேற்கொண்ட இச் ஷெல் தாக்குதலால்தெல்லிப்பழை வைத்தியசாலையிலிருக்கும் நோயாளர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ந-4)

## புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

ஓயாத அலைகள் நான்கு நடவடிக்கையில்

★ கப்டன் இளமங்கை (குமாரசாமி ஜீவகுமாரி)

(8 ஆம் பக்கம் பார்க்க)

# படையினரின் ஷெல் வீச்சினால் மக்களின் இடம் பெயர்வு மந்தகதியில்!

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் யுத்தம் தொடர்ந்து நடைபெற்று வருவதால் அங்கிருந்து சுமார் 81 குடும்பங்களைசேர்ந்த912பேர்நேற்று முள்ளித் தடை முகாமூடாக வடமராட்சி வந்தடைந்துள்ளனர்.

நேற்றுக் காலை முதல் இராணுவத்தினர் சரமாரியாகஆட்லறிஎறிகணைத்தாக்குதலை மேற் கொண்டதனால் மக்கள் வெளியேறுவது மந்தமாகவே இருந்தது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## "சிற்றிஒவ் றிங்கோ" இன்று புறப்படும்

(யாழ்ப்பாணம்)

பருத்தித் துறையில் இருந்து திருமலைக்கான "சிற்றி ஒவ் றிங்கோ" பயணிகள் கப்பல் சேவைஇன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளதாக யாழ். சிவில் நிர்வாகக் காரியாலயம் அறிவித்துள்ளது.

இக் கப்பலில் பயணம்செய்வதற்கு பயண அனுமதி பெற்றவர்கள் பயண ஆயத்தங்களுடன் இன்று காலை 7.30 மணிக்கு யாழ். சிங்கள மகா வித்தியாலயத் திற்கு சமுகமளிக்குமாறு சிவில் நிர்வாகக் காரியாலயம்கேட்டுள்ளது.

(வ-4)

## யாழ். நீதிமன்றத்தால் 18 பேர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 18 இளைஞர்கள் சட்டமா அதிபரின் அறிவுறுத்தலின் பேரில் நேற்று யாழ். நீதி மன்றத்தால்விடுதலை செய்யப்பட்டுள்ளனர். மேலும் இருவர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இ. சிவானந்தமூர்த்தி(கொடிகாமம்), சி. ஜீவபாலன்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## சிறிதும் சிந்திக்காது சிறுநீர் கழித்த சிப்பாய் பொலிஸ் காவலில்

சிறுநீர் கழித்ததற்காக இராணுவ சிப்பாய் ஒருவர் பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார் இச்சம்பவம் அம்பாந்தோட்டையில் இடம்பெற்றுள்ளது. இது பற்றி மேலும் தெரியவருவதாவது.

சில தினங்களுக்கு முன் உத்தியோகபூர்வ வேலைகளுக்காக சீருடையில் சென்ற சிப்பாய் ஒருவர் அம்பாந்தோட்டை மாவட்ட நீதிவானின் வதிவிட வளவிற்குள் சென்று சிறுநீர் கழித் (8ம் பக்கம் பார்க்க)

ஐ. பி சியில் ஆஞ்சநேயர் என்னும் பெயரில் சிவதேசம் எங்கும் ஒலித்த குரலுக்குரியவர், எஸ். ஸ்ரீகஜன்தான் இந்த ஆஞ்சநேயர். இவருக்கே உங்கள் வாக்குகளை அளியுங்கள்



X | 8 | X

(இ-845)

உங்கள் வாக்கு எஸ். ஸ்ரீகஜனுக்கே!



அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்

பாராளுமன்ற பொதுத் தேர்தல் யாழ். மாவட்டம் 2000





X



2 | X

தமிழினத்திற்காக தன்னுருயிரை நீத்த அமரர் மாமனிதர் குமார் பொன்னம்பலம்

அப்பாத்துரை விநாயகமூர்த்தி (சட்டத்தரணி)

தமிழனென்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா

( இ 884 )


## தலை மன்னாரில் கைதுசெய்யப்பட்ட

# இருவரை நீதிமன்றில் ஆஜர் செய்ய யாழ். நீதிமன்றம் அவசர உத்தரவு

(யாழ்ப்பாணம்)

தலைமன்னார் கடற்பரப்பில் ஸ்ரீலங்கா கடற்படையினரால் சந்தேகத்தின் பேரில் 1997 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட இருவரை யாழ் நீதி மன்றத்திற்கு சமுகமளிக்க வகை செய்யுமாறு காங்கேசன்துறைகுற்றத்தடுப்புப்பிரிவு பொலிஸாரிடம் யாழ். நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காங்கேசன் துறையை சொந்த முகவரியாகவும் மல்லாவி முல்லைத்தீவை தற்காலிக முகவரியாகவும்கொண்ட சுப்பையா யோகராசா மற்றும் வல்வெட்டித்துறையை சொந்த வசிப்பிடமாகவும் அம்பலவான பொத்தனை முல்லைத்தீவை தற்காலிக முகவரியாகக் கொண்டவருமான அருளானந்தம் ரகு என்பவர்களுக்கே மேற்படி அறிவித்தல் அனுப்பும்படி கூறப்பட்டுள்ளது. (க-12)

### சனசமூக நிலையத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தென்கோப்பாய் டச்சுவீதியிலுள்ள முழுமதி சனசமூக நிலையத்தின் திறப்பு விழா நாளை 4 ஆம் திகதி புதன் கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

தலைவர் நாகமுத்து இராசரத்தினம் தலைமையில் நடைபெறும் மேற்படி நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வலிகிழக்கு பிரதேச சபை உபதலைவர் ஆர். எல். ரவி கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வலிகிழக்கு பிரதேச சபை செயலாளர் குகதாஸ், வலிகிழக்கு பிரதேச சபை பொறுப்பதிகாரி இவதாசன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளார்கள். (த)

### யாழ் ...

(சாவகச்சேரி) ஆகியோரே விடுவிக்கப்படாமல் அடுத்த மாதம் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

விடுவிக்கப்பட்டோரின் பெயர் விபரம் வருமாறு:

செ. சத்தியசாயி பாபா (சுன்னாகம்), தி.மகேந்திரராசா (சுன்னாகம்), ஆ.ஆனந்தராசா (வரணி), இ.தர்மலிங்கம் (அச்சுவேலி), சி.விமலகுமார் (கொடிகாமம்), அ. சந்திரன் (கொடிகாமம்), இ. கணேசலிங்கம் (கொடிகாமம்). டில்சன்கோ தமிழ்வாணன் (பண்டத்தரிப்பு), ந. மனோரஞ்சன் (மானிப்பாய்), ந. நேசன் (வட்டுக்கோட்டை), ம. லெஸ்லிராஜன் கண்ணா (சாவகச்

# இராசி பலன்

03/ 10 / 2000

(புரட்டாதி 17, செவ்வாய்)

சஷ்டி

பி.இ. 3.40 வரை

கேட்டை வைகறை 5.13 வரை

இராகுகாலம் 3.02- 4.32

சுபநேரம் 10.32- 12.02

சஷ்டி விரதம்

**மேடம்**
வேலைப்பழு அதிகம், நண்பர்கள் மனஸ்தாபம், அலைச்சல், காரிய அனுகூலம்.

**இடபம்**
பிரயாணம், சுவாரஸ்யம், விருந்துபசாரம், தனவரவு.

**மிதுனம்**
சந்தோசமான செய்தி. புதிய முயற்சி பற்றிய சிந்தனை, எதிரிகளால் நன்மை.

**கடகம்**
புத்திரர்களால் கவலை, காரியநன்மை, இறுவியாதி.

**சிங்கம்**
உறவினர்கள் மனஸ்தாபம், வாகன சுகம், தாய்வழி உறவு,

**கன்னி**
தனவரவு, சகோதரர் உதவி, குடும்பசுகம், பிரயாணம்.

**துலாம்**
வாக்குக் கலகம், காரியத் தாமதம், தனவிரயம்.

**விருச்சிகம்**
தெளிவான சிந்தனை, காரிய நன்மை, உடல்நல சுகம்.

**தனுசு**
தனவிரயம், பிரயாணக் கஷ்டம், சயன சுகக்குறைவு, காரியத் தாமதம்.

**மகரம்**
தனலாபம், கீர்த்தி, குடும்ப சுகம், நிலைமாறுதல்.

**கும்பம்**
அதிகாரிகள் சந்திப்பு, தொழில் மேன்மை, மன


வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி.

வேலைகளுக்கான

# கேள்வி அறிவித்தல்

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபைத் தவிசாளரினால் கீழ்க்குறிப்பிடப்பட்டிருக்கும் வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

01. கேள்விப் பத்திரங்களை 20. 10. 2000 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) தரம் எம் '9' அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு பெற்ற ஒப்பந்தகாரர்கள் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் சமர்ப்பிக்கும் ஒப்பந்தகாரர்கள் ஆகியோரிடமிருந்தும் அங்கீகரிக்கப்பட்ட பொது ஸ்தாபனங்களிடமிருந்தும் கோருகின்றேன். கீழே குறித்த தொகையை செலுத்தி கேள்விப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

02. கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்பவர்கள் கணிய அளவுச்சிட்டை, கொடுப்பனவு அறிக்கை என்பன தயாரிக்கக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.

03. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை கடித உறையிலிட்டு அரக்கு முத்திரை வைத்து தலைவர் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இட்டு இரண்டாம் பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் அவர்களுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். இரண்டு பிரதிகளையும் உரிய இடங்களில் 23.10.2000ம் முற்பகல் 11.00 மணிக்கு இடையில் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

04. கேள்விகள் 23. 10. 2000 முற்பகல் 11.30 மணிக்கு திறக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்.

தல் வேண்டும்.

04. கேள்விகள் 23. 10. 2000 முற்பகல் 11.30 மணிக்கு திறக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமூகமளிக்கலாம்.

05. கேள்விகள் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு உரிமை உண்டு.

06. மேலதிக விபரங்களை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

| வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் |
|---|---|---|
| 01 கொமமாந்துறை வீதி புனரமைத்தல் | 1000-00 | 250-00 |
| 02 மாவடி பராசக்தி ச.ச. நிலைய குழாய்க் கிணறு அமைத்தல் | 200-00 | 100-00 |
| 03 நாவலர் ச.ச. நிலைய கட்டடம் அமைத்தல் | 1000-00 | 250-00 |
| 04 ஸ்ரீ அம்பாள் ச. ச. நிலையத்தில் மலசல கூடம் அமைத்தல் | 200-00 | 100-00 |
| 05 இமையிதோட்டம் ச. ச. நிலைய பாலர்பாடசாலை கட்டடம் அமைத்தல் | 1000-00 | 250-00 |
| 06 கப்புதூ ச. ச. நிலைய கட்டடம் புனரமைத்தல் | 1000-00 | 250-00 |
| 07 கோவிற் சந்தையில் இரு மலசலகூடங்கள் அமைத்தல் | 250-00 | 150-00 |
| 08 நெல்லியடி பொதுச்சந்தை கூரைதிருத்தம் | 250-00 | 150-00 |

வ.நடராசா ஜே,பி
தவிசாளர்
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை
கரவெட்டி.

(இ-848)

பாய்), ந. நே ன் (வட்டுக்கோட்டை), ம. லெஸ்லிராஜோன் கண்ணா (சாவகச்சேரி), க. ஜெயநிதன் (சாவகச்சேரி), க. ஜெகதாஸ் (தொண்டமனாறு), கு.விஜயகுமார் (தொண்டமனாறு), கு.வினோச்குமார் (உடுப்பிட்டி), சோ.பிரதீப் (உடுப்பிட்டி), சி. சின்னத்துரை (கரவெட்டி), சி. நாகபூசணி (சுழிபுரம்)

ஆகியோரே விடுவிக்கப்பட்டவர்களாவர். (வ-12)

**கும்பம்**

அதிகாரிகள் சந்திப்பு. தொழில் மேன்மை, மனக்கஷ்டம்.

**மீனம்**

தந்தைவழி உறவு, பிரயாணம், காரியத் தாமதம், செல்வாக்கு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்


# கண்ணீர் அஞ்சலி

வலம்புரி பத்திரிகையின் உதவி ஆசிரியர்

திரு. சு. துரைசிங்கம்
(கவிஞர் துரையர்)

அவர்களின் அன்பு மாமனார்

## வேலுப்பிள்ளை ராசா
(வரிசப்புலம் சுன்னாகம்)

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

வலம்புரிக் குடும்பம்

15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.

### தமிழ்மக்கள் பிரச்சினையை

# சர்வதேச சமூகம்முன் அம்பலப்படுத்தும்

# ஆயுதமாக வாக்குரிமை பயன்பட வேண்டும்

## யாழ். இந்து சமய பேரவை தெரிவிப்பு

[யாழ்ப்பாணம்]

தமிழ் மக்கள் தமது பிரச்சினையை சர்வதேச சமூகத்தின்முன் கொண்டுவருவதற்கும், தமது அபிலாசைகளை திரிபு படுத்தும் சக்திகளை ஒரங்கட்டுவதற்கும் இறைவனால் அருளப்பட்ட ஒரு ஆயுதமாக வாக்குரிமையை பயன்படுத்துவது அவசியம்.

யாழ்ப்பாணம் இந்து சமய பேரவையினர் தேர்தல் தொடர்பாக தமிழ் மக்களின் நிலைப்பாடு குறித்து வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது;

கடந்த அரைநூற்றாண்டு காலமாகத் தமிழ் மக்கள் பாராளுமன்ற ஜனநாயகத்தில்நம்பிக்கையுடன் முழுமையாகப் பங்குபறறிய போதும், இந்நாட்டை மாறி மாறி ஆண்ட அரசாங்கங்களின் போக்குக் காரணமாக அவர்களது அடிப்படைப் பிரச்சினைகளுக்கு இன்னும் தீர்வு காணமுடியாமல் போய்விட்டது..

இனிவரும் காலங்களிலும் பாராளுமன்றத்தின் மூலம் தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணமுடியும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இடையாது;

ஒன்று அல்லது இரண்டு அரசியல் கட்சிகளால் பிரதிநிதித்துவம் செய்யப்பட்ட யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்று 20 அரசியல்கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன.

வரலாறுகாணாதவகையில் தமிழ் மககளுக்கு எதிராக யுத்தமும், அழிவும், அடக்குமுறைகளும் கட்டவிழ்த்து விடப்பட்டுளள நிலையில் ஒரே குடையின் கீழ் ஒன்றுபட்டுத் தம் உரிமைகளுக்காகக் குரல் எழுப்ப வேண்டிய நேரத்தில் அவர்களின் ஒற்றுமையைச் சிதைத்து சுதந்திர உணர்வுகளை மழுங்கடிக்கும் முயற்சியே இதுவாகும்;

புரையோடிப்போன இனப் பிரச்சினையைத் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேசித் தீர்ப்பதற்குப் பதிலாக இராணுவ நடவடிக்கை மூலம் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்க நினைக்கும் பேரினவாத கட்சிகளும்அவர்களுக்கு துணைபோபவர்களும், இத்தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

இக்கட்சிகளை இனங்கண்டு முற்றாக நிராகரிக்குமாறும் இந்த நாட்டின் நீண்ட நெடுங் காலமாகத் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவும் பேரினவாத அரசாங்கங்களின் அடக்குமுறை சட்டங்களுக்கும், திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களுக்கும் எதிராகப் போராட்டங்களை நடத்தி தமிழ்பேசும் மக்களின் ஒற்றுமை, ஒருமைப்பாடு தாயகக் கோட்பாடு ஆட்சியுரிமை ஆகியவற்றைத் தொடர்ந்து வலியுறுத்தி வரும் கட்சிகளை இனங்கண்டு அவற்றிற்கு வாக்களிக்குமாறு அனைத்து தமிழ் மக்களையும், இந்துக்களையும் கோருகின்றோம்.

இவ்வாறு அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [க]

## வாணிவிழா

இலங்கை பொற்றோலிய வடபிராந்திய கூட்டுத்தாபனம் நாளை புதன் கிழமை நவராத்திரி தினத்தைமுன்னிட்டு பூசையுடன்கூடிய வாணிவிழாவினை நடத்தவுள்ளனர். (த)

## கறுப்புப்பெட்டி அழிந்து நாசம்

(கொழும்பு)

அமைச்சர் அஷ்ரப் பயணம் செய்தவேளை. விபத்துக்குள்ளான உலங்குவானூர்தியின் கறுப்புப்பெட்டி அழிந்து நாசமாகி இருக்கலாம் என விபத்து குறித்த விசாரணைகளை நடத்திவரும் விமானப்படையினர் உறுதிபட அறிவித்துள்ளனர். [உ]

# யுத்தத்தின் கொடுமையால் அவதியுறும் தென்மராட்சி மக்கள்

(தென்மராட்சி)

யுத்தஅனர்த்தங்கள்காரணமாக பிரதான உழைப்பாளர்களை இழந்த நிலையில் இருக்கின்ற பெண்களும், குடும்பப் பிரச்சினைகள் காரணமாக கணவன்மார்களாகைவிடப்பட்ட பெண்களும், மாதாந்த அல்லது நாளாந்த வருமானமும் இல்லாத நிலையில் இருக்கும்கணவன்மார்களின்பெண்களும், தத்தம் குடும்பங்களில் இருக்கின்ற பாடசாலை செல்கின்றவர்களிற்குரிய கல்வி, மற்றும் போசாக்குக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கமுடியாமல் திண்டாடிவருவதாகத் தெரிகின்றது.

இத்தகைய குடும்பங்களின் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கான உதவித் திட்டங்களையோ அல்லது செயல் திட்டங்களையோ உதவி வழங்கும் நிறுவனங்களும் ஆதரவளிக்கும் நிறுவனங்களும் அமுல் செய்யாமல் இருந்து வருகின்றன.

அதனால் இக்குடும்பங்களில் இருக்கும் படிக்கும் பிள்ளைகளால் கல்வியை முழுமையாகப் பெறமுடியாத நிலையில் காணப்படுகின்றன அத்துடன் போதியஉணவு, போதியஊட்டச்சத்து அற்ற நிலையில்இக் குடும்பங்களைச் சார்ந்த பிள்ளைகள் இருந்து வருகின்றனர். இவர்களின் வாழ்க்கை முன்னேற்றத்துக்கான திட்டங்கள் கூட உருவாக்கப்படவில்லை என அறியப்படுகின்றது.

அரசினால் மாதத்தில் ஒரு தடவை வழங்கப்படுகின்ற உலர்நிவாரணத்தைமட்டுமே நம்பி வாழ்கின்ற பெண்கள் தலைமைத்துவத்தினை ஏற்றுள்ள குடும்பங்களுக்குப் பயன் தரக் கூடிய செயல் திட்டங்களை அமுல் செய்ய யாழ்ப்பாணத்தில் பணி செய்து வருகின்ற தொண்டர் அமைப்புகள் முன்வரல் வேண்டும்என பாதிக்கப்பட்ட பெண்கள் சார்பில் கூறப்பட்டுள்ளது. (க-77)

## இம்மாதம் 10ஆம்திகதி

# யாழ். மாவட்ட மாணவர்களிடையே கட்டுரைப்போட்டி

(இணுவில்)

பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் போஷாக்குப் பிரிவின் அனுசரணையுடன் கட்டுரைப் போட்டி ஒன்று இம்மாதம் 10 ஆம் திகதி நடத்தப்படவுள்ளது.

போஷாக்கு கல்வி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக யாழ். மாவட்ட மாணவர்க்கிடையே மேற்படி போட்டி இரு பிரிவுகளாக நடத்தப்படவுள்ளது.

பிரிவு - 1 இல் 9 வகுப்பிற்குட்பட்டவர்கள் பங்குபற்றவுள்ளனர் ஒன்றரை மணித்தியாலங்களிற்கு 800சொற்கள் கொண்ட கட்டுரை வரையப்பட வேண்டும் பிரிவு2 இல் க.பொ த.சாதாரண, உயர்தரம் மாணவர்கள்பங்குபற்றலாம்;

...குணவு கிடைக்காத சிறுவர்களின் பிரச்சினை;

2) ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களின் போசாக்குப் பற்றித் தாய்மார் அறிந்திருக்கவேண்டியவை.

3) சிறுவர் போஷாக்கில் ஐ. நாடுகளின் பங்கு போன்ற தலைப்புகள் வழங்கப்பட்டுள்ளன;

இரண்டு பிரிவிலும் ஒருவர் வீதம் தெரிவுசெய்யப்பட்டு, வலய மட்ட போட்டிகள் இம்மாதம் 20ம் திகதிக்கு முன்னும், மாவட்டமட்ட போட்டிகள் அடுத்தமாதம் 5 ஆம் திகதிக்கு முன்னும்நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது; (த-49)

## பிரதி பொலிஸ்மா அதிபராக தமிழர்நியமனம்

(கொழும்பு)

சிரேஸ்ட பொலிஸ்மா அதிபர் ரி. இ. ஆனந்தராஜா பிரதிப் பொலிஸ்மா அதிபராக தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்பொழுது வெளிநாடு சென்றுள்ள பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு மீளவும் நாடு திரும்பும் வரை ரி. இ. ஆனந்தராஜா பதில் பொலிஸ்மா அதிபராக கடமையாற்றுவார் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (க-2)

## ஒளடதபாகசாலையை அச்சுவேலியில் அமைக்க முயற்சி

### ஈ.பி டி.பி செயலரிடம் மகஜர் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் மருந்துகளை உற்பத்தி செய்வதற்கான ஒளடதபாகசாலைஒன்று அமைப்பது தொடர்பாகஅகில இலங்கைஅரச சேவை ஆயுர்வேத வைத்திய அதிகாரிகள் சங்கம் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரும் ஈ பி.டி பியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு மகஜர் ஒன்றினை அண்மையில் கையளித்துள்ளனர்.

இந்த ஒளடத பாகசாலை கைதடியில் முதலில் அமைக்கத் திட்டமிடப்பட்டது என்றும் தற்போதைய சூழ்நிலையில் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அச்சுவேலியில் இதற்கென உறுதியளிக்கப் பட்டுள்ள காணியில் இவ்வருடம் கட்டட வேலைகள் தொடங்கப்பட ஒழுங்குகளை மேற்கொண்டு, வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள நகரசபை, உள்ளூராட்சித்திணைக்களம் மாகாணசபை, மத்திய அரசாங்கத்தின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகள மருந்தகங்களுக்கு மருந்துகளை விநியோகிப்பதற்குஆவன செய்ய வேண்டுமென இம்மகஜரில் கோரப்பட்டுள்ளது.

மேலும் மத்திய மருந்தகம் அமைத்தல், ஆதார வைத்தியசாலை, மூடப்பட்ட வைத்தியசாலைகளைத் திறத்தல் பணியாளர்களது நியமனம் முதலான கோரிக்கைகளும் இம்மகஜரில் அடங்கியுள்ளன. (க)

பட வேண்டும் பிரிவு2 இல் க. பொ த.சாதாரண ,உயர்தரம் மாணவர்கள்பங்குபற்றலாம்: இப்பிரிவினர் இரண்டரை மணித்தியாலங்களுள் 1500 சொற்கள் கொண்ட கட்டுரை வரையவேண்டும்.

பிரிவு ஒன்றிற்கு பின்வரும் மூன்று தலைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன:

1) நிறையுணவே ஆரோக்கியத்திற்கு வழி.
2) போஷாக்கு குறைபாட்டு நோய்கள்:
3) தாய்ப்பாலே சிறந்த நிறையுணவு பிரிவு இரண்டிற்கு 1) உலக நாடுகள் எதிர் கொள்ளும் போஷாக்

பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது: (த-49)

தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது, (க-2)

அச்சுவேலியில் இதற்கென

ரில் அடங்கியுள்ளன. (க)

# நோயாளி பரிதாப மரணம் சடலம் பொறுப்பேற்கப்படவில்லை

## வைத். வட்டாரங்கள் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

யாழ், போதனா வைத்திய சாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்று வந்த நோயாளி ஒருவர் கடந்த 30 ஆம் திகதி மரணமாகியுள்ளார்.

திடல் புரம் புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த வி. மயில்வாகனம் என்பவரே மரணமானவராவர்:

இவரது சடலத்தை எவரும் பொறுப்பேற்க முன்வராமை குறித்து வைத்தியசாலை வட்டாரங்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளன: (க-12)

# தேர்தல் ஆரவாரங்கள் எதுவும் கொழும்பு நகரில் இல்லை

[கொழும்பு]

இம் மாதம் 10 ஆம் திகதி இடம்பெறவுள்ள பொதுத் தேர்தல் தொடர்பாக எதுவித ஆரவாரங்களும் கொழும்பு நகரில் இதுவரையில் இல்லையென கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மக்கள் தமது அன்றாடக் கடமைகளில் வழமை போல் ஈடுபட்டுவருவதாகவும் தேர்தல் விடயங்களில் அதிக ஆர்வம் காட்டுவதாக தெரியவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் சட்சி ஆதரவாளர்கள்தேர்தல் சுவரொட்டி ஒட்டுவதிலும், [பனர்களை கட்டி தொங்கவிடுவதிலும் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது: (க)


அரச அதிகாரிகளை சுதந்திரமாக
இயங்க வைப்போம்
நிர்வாகத்திற்கு உற்சாகமூட்டி உத்வேகமளிப்போம்
அபிவிருத்திப் பணிகளை வேகப்படுத்தி
நெறிப்படுத்துவோம்
பிராந்திய அபிவிருத்தியை முதன்மைப்படுத்தும்
எம்மை ஆதரித்திடுவீர்

X

என்றும் உங்கள் சின்னம் நங்கூரம் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட் + ஈரோஸ்)
(1689)

# சிறுவர் உரிமைகளை மீற யாருக்கும் உரிமைகிடையாது

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

சிறுவர் உரிமைகளை மீறவோ அல்லது அவர்கள் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுவதற்கோ எவருக்கும் உரிமை கிடையாது.

சர்வதேசசிறுவர் தினத்தையொட்டி வெளியிட்டுள்ள அறிக்கையில் ஜனாதிபதிசந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க மேற் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

எமது சிறுவர்கள் கைவிடப்பட வேண்டியவர்களல்ல முழுச் சமுதாயமும் அவர்களைப் பேணிக்காக்க முன்வர வேண்டும்.

சிறுவர்களது கையில் தான் நாட்டின் நாளைய வரலாறு தங்கியுள்ளது.

இதை உணர்ந்து, அனைத்துத் தரப்பினரும் செயற்பட வேண்டும். [உ]

# இந்துமத குருபீட தலைமையகத்தை யாழ்ப்பாணத்தில் அமைக்க அங்கீகாரம்

[யாழ்ப்பாணம்]

இந்து சமய கலாசார அமைச்சு இந்துமத குருபீடத்தின் தலைமையகத்திற்கான புதிய கட்டடத் தொகுதியை யாழ்ப்பாணத்தில் அமைப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவுடன் ஈ. பி. டி. பி யின் செயலாளரும் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தொடர்பு கொண்டு இக்கட்டடத் தொகுதி அமைக்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதேவேளை இந்து சமய விவகாரகலாசாரத்துக்கென தனியான அமைச்சுஒன்றினை அமைச்சரவை அந்தஸ்த்தில் ஏற்படுத்த ஜனாதிபதி தனது சம்மதத்தை டக்ளஸ் தேவானந்தாவிடம் தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [க-2]

# கொடிகாமம், வரணி மக்கள் வாக்களிக்க முடியாத சூழ்நிலை ஏற்படலாம்

[யாழ்ப்பாணம்]

கொடிகாமம், வரணி போன்ற தென்மராட்சி வாக்காளர்கள் வாக்களிக்க முடியாத சூழ்நிலை தோன்றக்கூடும் என்று யாழ். மாவட்ட தேர்தல் அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். குடா நாட்டில் நிகழவுள்ள தேர்தலில் வாக்களிக்கும் வாக்காளர் நன்மைகருதி மேலும் வாக்களிப்பு நிலையங்களில் மாற்றங்கள் ஏற்படக் கூடும் என யாழ். தேர்தல் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

இதே வேளையில் தென்மராட்சி பச்சிலைப்பள்ளி பிரதேசங்களில் இருந்து இடம் பெயர்ந்த வாக்காளர்களுக்கு ஏற்கனவே வாக்களிப்பு நிலையங்கள் மாற்றப்பட்டுள்ளன.

மேலும் தென்மராட்சியின் கொடிகாமம், வரணி ஆகிய பகுதியில் இருந்து மக்கள் இடம் பெயருவதால் வாக்களிப்பு நிலையங்களில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டி நரிடலாம். இம்மாற்றங்ளை முற்கூட்டியே மேற்கொள்ளாவிட்டால் திடீரென மாற்றம் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படும் பட்சத்தில் அப்பகுதி மக்கள் வாக்களிப்பில் பங்கு பற்ற முடியாத சூழ்நிலைதோன்றக்கூடும் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

வாக்களிப்பு நிலையங்கள் குறித்த தகவல்கள் பத்திரிகை மூலமாக வெளியிடப்படும் எனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (க-12)

# இருவர் பலி

(கொழும்பு)

நீர்கொழும்பு கட்டுவை பகுதியில் கடந்த சனியன்று இடம் பெற்ற ரயில் வான் விபத்தில் வானில் பயணம் செய்த இருவர் ஸ்தலத்தில் கொல்லப்பட்டுள்ளனர்சாரதி படுகாயமடைந்த நிலையில் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

ரயில் கடவை ஒன்றைக் கடக்க முற்பட்ட போதேஇவ் விபத்து இடம் பெற்றுள்ளது. (ந-4)

# மனித ஆளுமை விருத்தியில் முக்கியம் பெறுவது பாலர் கல்வியே

## நல்லூர் பிரதேச சபை செயலர் தெரிவிப்பு

(நல்லூர்)

மனித ஆளுமை விருத்தியில் பாலர் கல்வியின் பங்களிப்பு அவசியமானது. பாலர் தமது சிறுபராயத்திலிருந்தே கல்வியை கண்ணென போற்றிக் கற்றல் வேண்டும். பாலர் பாடசாலைகள் இவ் வகையில் சிறப்பாக பங்காற்றியுள்ளன.

நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் செ. செல்வரத்தினம், கடந்த 10 ஆம் திகதி கோண்டாவில் இராமகிருஸ்ண மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற பாலர் பாடசாலை விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு கூறினார்.

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையம், குமரன் விளையாட்டுக் கழகம் என்பவற்றின் ஆதரவுடன் இயங்கும் பாலர் பாடசாலையின் வருடாந்தவிளையாட்டுவிழா அ. ஆனந்தமூர்த்தியின் தலைமையில் நடைபெற்றது. அவ்விழாவில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

''எதிர்காலச் சந்ததியினராகிய பாலர்கள்,பாலர் பாடசாலையில் கற்கின்ற போதே பழக்கவழக்க ஒழுக்க நெறிகள், பண்பாடு, குருபக்தி, பெரியோரை மதிக்கும் தன்மை, தெய்வபக்தி, பரந்த எண்ணங்கள் என்பவற்றைத் தமதுமனதில் கண்ணே பதித்துக் கொள்ள முன்பள்ளி ஆசிரியர்கள் உதவுதல் வேண்டும்.

பாலர்களின் கல்வியுட்பட சகல துறை வளர்ச்சிக்கும் பெற்றோர்களும், முன்பள்ளி ஆசிரியர்களும், பாடசாலைக் கல்விக்குச் சேர்ந்த பின் அவ் ஆசிரியர்களும் பங்களிப்பது மிகமிக அவசியமாகின்றது.

அள்ளக் குறையாத பெரிய சமுத்திரமாக, என்றும் வற்றாத ஊற்றாக மிளிர்வது கல்விச் செல்வம்'' என்றார். (க-103)

# ஜி. ரி. சற் நிறுவனம் உதவி

(வடமராட்சிகிழக்கு)

பளை பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களிற்கு ஜி. ரி. சற் நிறுவனம் பாடசாலைஉபகரணங்களை வழங்கவுள்ளது.

இவ்வுபகரணங்கள் 500 மாணவர்களிற்கு வழங்கப்படவுள்ளன.

மேற்படி உபகரணங்கள் பளை மத்திய கல்லூரி, கிளாலி றோமன்கத்தோலிக்க பாடசாலை, மாசார் அ. த. க பாடசாலை, கருணக்கேணி அ. த. க பாடசாலை யைச் சேர்ந்தமாணவர்களிற்கு வழங்கப் படுமென தெரிவிக்கப்படுகிறது.

பளை பிரதேசசெயலர் பிரிவில் வைத்து இவ்வுபகரணங்கள் விநியோகிக்கப்படவுள்ளன. (த-43)

# இடம்பெயரும் மக்களுக்கு ஈ. பி. டி. பி. அமைப்பினர் ஏற்பாடு

(வரணி)

கொடிகாமம், கச்சாய், மிருசுவில், குடமியன், நாவற்காடுபோன்ற பகுதிகளிலிருந்து பெரும்பாலானமக்கள் பாதுகாப்புக்கருதி வடமராட்சிக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

குழந்தைகள், முதியோர்கள், சிறுவர்கள் எனத்தாங்கொணாத்துயரத்துடன் வீதியோரங்களிலும், பொது இடங்களிலும் தங்கியுள்ளனர்.

இவர்களில் 200 க்கு மேற்பட்ட குடும்பங்களை ஈ. பி. டி. பி பொறுப்பாளர் அலெக்சாந்தரின் ஏற்பாட்டில் நாவலர்மடம் மகாவித்தியாலயத்தில் தங்கவைத்துள்ளனர்.

இவர்களிற்கு தேவையான உணவு மற்றும் அடிப்படை வசதிகளையும் இவ் அமைப்பினர் ஏற்பாடுசெய்துள்ளனர்.

மற்றும் குடியிருப்பு, மேலதிக தேவைகளுக்கான உதவிகளையும் பருத்தித்துறை இலங்கைச்செஞ்சிலுவைஆதரவுடன் இச்சபைச்செயலாளர் எஸ். தவராசா கண்காணித்து வருகின்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (த-28-43)

# குப்பி விளக்கு சரிந்ததில் எரிகாயங்களுக்குள்ளான மூதாட்டி வைத்தியசாலையில்; மற்றொருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

குப்பிவிளக்கு சரிந்ததை யடுத்து தீ விபத்தில் சிக்கிய மூதாட்டி ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைக்குட்பட்டார்.

பொன்னன் மூத்தி (வயது 80) என்ற இம் மூதாட்டி இரவு வேளை விளக்கு தட்டுப்பட்டு சரிந்ததையடுத்து விபத்துக்குள்ளானார்.

இதே வேளை ஏழாலையைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் குப்பிவிளக்கு விபத்தில் சிக்கி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதையடுத்து மரணமாகியுள்ளார்.

இச்சம்பவத்தில் கந்தசாமி ரவிச்செல்வன் (வயது 27) என்பவரே மரணமானவராவார். (க-12)

# தேர்தல் ஆவணங்கள்

இம் மாதம் 10ம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை ஒட்டி தேர்தலுக்குத் தேவையான சகல உபகரணங்களையும் ஆவணங்களையும் அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளை யாழ். தேர்தல் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பிவைப்பதற்கு வாக்குப் பெட்டிகளும், வாக்குச் சீட்டுகளும், தயார் நிலையில் வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. (வ-12)

றங்கள் செய்யப்பட வேண்டி நரிடலாம். இம்மாற்றங் களை முற்கூட்டியே மேற்

கடக்க முற்பட்ட போதேஇவ் விபத்து இடம் பெற்றுள் ளது. (ந-4)

ணங்கள் விநியோகிக்கப்பட வுள்ளன. (த-43)

யாழ். தேர்தல் திணைக்

பாடுகள் செய்யப்பட்டு வரு கின்றன. (வ-12)




தமிழ் மக்களை வதைக்கும்
யுத்தத்தையும்அவசரகாலச் சட்டத்தையும் இல்லாதொழிக்க
தோடம்பழச் சின்னத்திற்கு வாக்களியுங்கள்

**சுயேச்சைக் குழு-1** X



சுரேஸ் பிரேமச்சந்திரன் (சி-827) ஈ. பி. ஆர். எல். எவ். சுரேஷ் தலைமை

தர்மராஜா விலசன் இ. 7



**பாராளுமன்றத் தேர்தல்** யாழ்.மாவட்டம் 10-10-2000

தமிழினம் தலை நிமிர்ந்து நின்றிட, தந்தையின் இலட்சியம் வென்றிட,
தந்திடுவோம் எம் பொன்னான வாக்குகளை உதயசூரியனுக்கே!

**தமிழர் விடுதலைக் கூட்டணி** X

(இ-818)

## இன்று ஒரு தகவல்

# எம்மைப் படைத்த பகவானை காப்பதாக நாம் எண்ணுவது சரியா?

சைதன்ய மகாப்பிரபு ஆச்சிரம வாழ்க்கையையே நடத்தி வந்தார். அவர் ஆச்சிரமத்தில் இறைவன் திருவுருவங்களை வைத்து அதற்கு பூசைகள் செய்து நைவேத்தியங்களைப்படைப்பது வழக்கம்.

அவருக்கு பல சீடர்கள் இருந்தார்கள். ஆச்சிரம வாழ்க்கையென்பதால் அங்கு பொருளாதாரப்பற்றாக்குறையும் ஏற்பட்டிருந்தது.

சீடர்கள் பூசைக்கு ஆயத்தம் செய்த ஒருநாள் மாலைப் பொழுது ஆச்சிரமத்தில் இறைவனுக்கு கொடுக்கக் கூடிய நைவேத்திய பொருட்கள்எதுவுமில்லை.

இதற்கு என்ன வழியெனச் சிந்தித்த சீடர்களில் ஒருவரான "கிருஸ்ண தாஸர்" ஆசிரமத்திற்கு அருகில்வசித்த "ராதாபாய்" என்ற அம்மையாரிடம் சென்று அரிசி, சக்கரை முதலியன வாங்கி வந்து அமுது தயார் செய்தார்.

பூஜையின்போது மகாப்பிரபு "அமுதிற்குபொருட்கள் எப்படிக் கிடைத்தன என்று" கேட்டார்.

அதற்கு "தாம் ராதாபாய் அம்மாளிடம் சென்று கேட்டு வாங்கிவந்ததாகக் "கிருஸ்ண தாஸர்" கூறினார்.

உடனே மகாபிரபு ஓர் புன்னகையுடன் தன் சீடனை பார்த்து "அந்த அம்மையாரிடம் நீர் கொண்ட நம்பிக்கையும், விசுவாசமும் பகவான் ஸ்ரீகிருஷ்ணரிடம் உமக்கு இல்லையே" என்றார்.

"ஏன் அப்படி கூறுகிறீர்கள்" என்று ஆச்சரியத்துடன் சீடர் கேட்டார்.

அதற்கு மகாபிரபு 'நைவித்தியம் இல்லையென்று இந்த பெருமானிடம் கேட்டிருக்கலாமே' என்றார்.

கிருஸ்ண தாசருக்கு புரியவில்லை. "பகவானுக்கு நைவேத்தியம்இல்லை. என்று அவரிடம் கேட்டால் மட்டும் வெறும் பாத்திரத்தில் தானாகவே நைவேத்தியம் வந்து விடுமா" என்று கேட்டார்.

"இல்லை கிருஸ்ணதாஸர் நைவேத்திய இல்லைஎன்பதை அந்தபகவானிடம் சொல்லி நீ வேண்டியிருந்தால் அவரிடம் சென்று கேட்காமலேயே தானாகவே அவ் அம்மையார் பாலையும், சர்க்கரையும் அரிசியையும் கொண்டு வந்து கொடுத்திருப்பார்கள். தன்னிச்சையாகவே செய்யும் தருமத்தின் பலன், பிறர் கேட்டுச் செய்யும் தருமத்தின் பலனை விட அதிகம். நீர் சென்றுகேட்டதினால் அவர்கள் குறைவான புண்ணிய பலனையே பெறமுடிந்துள்ளது.

"நம்மையெல்லாம் படைத்துக் காக்கும் பகவானை நாம் காப்பதாக எண்ணுவது அறிவீனம்" என்றார்.

உண்மையும் அதுவே: எம்மைப் படைத்த இறைவனுக்கு எப்போது எது எது செய்யவேண்டும் என்பது நிச்சயமாக புரியும். சிறந்த பக்தியுடன் நாம் வழிபட்டால் அது நிச்சயம் எமக்கு கிடைக்கும் என்பதே உலக நியதி.

ஞானபூமி

## தரம்-05 இற்குட்பட்ட

# மாணவர்களுக்கு இலைக்கஞ்சி வழங்கும் திட்டம் விரைவில் அமுல்

(வவுனியா)

வவுனியா வடக்கு வலயக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த ஐந்தாம் தரத்திற்குட்பட்ட மாணவர்களுக்கு இலைக்கஞ்சி வழங்குவதற்கான திட்டம் ஒன்று செயற்படுத்தப்படவுள்ளது.

வவுனியா வடக்கு வலயக் கோட்ட கல்வி அதிகாரி இது தொடர்பாக ஈ.பி.டி.பி யின் செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா அவர்களிடம் விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து இதற்கான நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளது. மேற்படி வவுனியா வடக்கு கல்வி வலயக் கோட்டப் பகுதியில் உள்ள 84 பாடசாலைகளில் ஏழு பாடசாலைகளே நிரந்தர இடங்களில் தற்போது இயங்குகின்றன எனவும் 95 வீதமான மாணவர்கள் இடப்பெயர்வு மற்றும் வறுமை காரணமாக போதிய உணவின்றித் துன்பப்படுவதாகவும் இதனால் பலர் திடீர் திடீரென போஷாக்கின்மையால் மயங்கிவிழும் நிகழ்வுகளும் நடைபெறுகின்றது என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## நவராத்திரி விழா

(நெல்லியடி)

கரணவாய் வடக்குஎள்ளம் குளம்பதி ஸ்ரீபத்திரகாளி ஆலயத்தில் நவராத்திரிபூஜைகள் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

நவராத்திரி காலங்களில் தினமும் மாலை வேளையில் பக்தர்களால் விசேட பஜனை நிகழ்த்தப்படுகின்றது.

(செ-18)

★ ★ ★

(புலோலி)

உடுப்பிட்டி அருள்மிகு பகவதி அம்பாள் ஆலய நவராத்திரி விழா கடந்த 28ம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. ஆலயபிரதமகுரு சிவஸ்ரீ சா.மி கனகசபாபதிக் குருக்கள் விசேட பூசைகளை நடத்திவருகின்றார். (க-52)

## தடம்புரண்ட வாகனம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

வல்லைப் பாலத்தருகே கடலில் புரண்ட இராணுவ வாகனம் மீட்கப்பட்டுவிட்டதாக அறியப்படுகிறது.

வல்லைப்பாலத்திற்கருகே ஏற்பட்ட இச்சம்பவத்தால் யாழ்.பருத்தித்துறை வீதிப் போக்கு வரத்து தடைப்பட்டமை ஏற்கனவே தெரிந்ததே. (க-12)

## மின்னல் தாக்கி ஒருவர் பலி

(மட்டக்களப்பு)

அக்கரைப் பற்றுப்பகுதியில் இடிமின்னல் தாக்கியதில் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானார்மற்றொரு நபர் காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்றுமுன் தினம் மாலை 4-30 மணியளவில் வயலில் வேலைசெய்து கொண்டிருந்த சமயம் இடம் பெற்றுள்ளது. (ந-5)

## சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பொற்பதிவீதியில் மிக நீண்ட காலமாக தூர்ந்துபோயிருந்த ஒருமைல் நீளமான கால்வாயை நேதாஜி சனசமூக நிலையத்தினர் நேற்றுமுன்தினம் சிரமதானப்பணிமூலம் சீர்செய்துள்ளனர்.

இச்சிரமதானப்பணியை நல்லூர் பிரதேசசபைத் தலைவரும் யாழ். மாவட்ட ஈ.பி.டி. பியின் பிரதி அமைப்பாளருமான க. மணிபல்லவராஜன் ஆரம்பித்துவைத்தார். (ந)

## இலவச மருத்துவமுகாம்

## நவராத்திரி நாயகியை வலம்புரியில் வழிபடுவோம்



## இலக்குமி துதி

மூன்று நாள் கொலு விருத்தி - ஊரெலாம்
கூடி விழா எடுத்து இலக்குமியை
அலங்கரித்து கும்பத்தில் இருத்தி
குங்குமக்காரி புகழ் பாடி
குலவிளக்கேற்றி கும்பிடும் அடியார்க்கு
கேட்கும் வரமளித்திடுவாய் அம்மா
இலக்குமியே!

பத்மதர்சினி
தரம் - 10
யா/ அத்தியர் இந்துக்கல்லூரி

✶ ✶ ✶

## நீவாம்மா,...!

புன் சிரிப்புடன் செந்தாமரையில் எழுந்தருளிய
திருமகளே
மக்களின் துயர் துடைக்க ஓடி வாருவாயம்மா
உயிர்களைக் காக்க செல்வத்தை அளிக்கும்
லக்சுமியே
யுத்தத்தை நிறுத்தி நாட்டில் சமாதானமளிக்க
ஓடி வாருபம்மா

ஆக்கம் துஷந்தி நாகராசா
2002 க. பொ. த. உயர்தரம்
(வர்த்தகப் பிரிவு)
யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

✶ ✶ ★

## வணங்குகிறோம்...!

நவராத்திரி நாயகியே திருமகளே
தவக்கோல நாயகியே பூமகளே
தெவிட்டாத இசையின் நாயகியே
குவிக்கின்றேன் கரத்தினை பாதமதில்.

க. துஸ்யந்தி
தரம் -10
யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

✶ ✶ ✶

## நவராத்திரி

நவராத்திரியில் நவநவமாய் வடியெடுத்து
நம்பிநோர்க்கு அருள்புரியும் நாயகியே
தவம் இருந்து உன்னைத் தொழுதோம்
தந்தருள் வாய் என்றும் நிறை செல்வம்

சி. பிரசாந்
தரம் - 7
யாழ். யூனியன் கல்லூரி

★ ★ ★

## வரம்தர வேண்டுமம்மா

ஆரணியே யம்பிகையே ஆயகலையளிக்கும்
சௌந்தரியே
அந்தரியே உனக்கெல்லா உயிர்களுமே

குழுத் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா அவர்களிடம் விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து இதற்கான நடவடிக்கைக்கு முதற் கட்டமாக ஒரு லட்ச ரூபா வழங்கப்பட்டுள்ளது.

மதிய உணவாக இலைக் கஞ்சி வழங்கப்படவுள்ள இத் திட்டத்தினால் வவுனியா மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டில்உள்ள,மற்றும் கட்டுப்பாட்டில் இல்லாத 84 பாடசாலைகளைச் சேர்ந்த 7769 மாணவர்கள் வரை பயன் பெறவுள்ளனர்.

ஓமந்தை கோட்டக் கல்வி அலுவலகம் இதற்கான நடைமுறை நடவடிக்கைகளை மயங்கிவிழும் நிகழ்வுகளும் நடைபெறுகின்றது என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(க)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில்ஐக்கிய தேசிய கட்சிசார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் முதலாவது பிரச்சாரக் கூட்டம் காரைநகர் மணற்காடு முத்துமாரியம்மன் ஆலய முன்றலில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஐ: தே: க முதன்மை வேட்பாளர் எஸ். மகேஸ்வரன் உரையாற்றினார்.

(வ)

## இலவச மருத்துவமுகாம்

(இருபாலை)

கோப்பாய் லயன்ஸ்கழகத்தின் ஆதரவுடன் வெள்ளெருவைபிள்ளையார் சனசமூக நிலையத்தின் தலைவர் லயன் எவ். ஏ சில்வெஸ்ரரின் தலைமையில் இலவச மருத்துவ முகாம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இம்முகாமில் எஸ். எம். பெர்னாண்டோ ஸ்தாபனத்தினரின் ஆதரவுடன் கண் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு 48 பேருக்கு இலவசமாக மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்பட்டது. (க-2)

ஆரணியே யம்பிகையே ஆயகலையளிக்கும்
சௌந்தரியே
அந்தரியே உனக்கெல்லா உயிர்களுமே
சொந்தமன்றோ
அன்பு வெள்ள அலைகளிலே பள்ளி கொண்ட என்
தாயே
வம்பு உள்ளம் கொண்டவரை வழிமாற்றி அருள்
கொடம்மா
என்னினத்தார் எழுமையிலும் உன்னருளால் ஏற்றம்
காண
என்றுமிந்த அகிலத்தில் அழுகையதை அழித்
திடம்மா
நானிலத்தின் நாயகியே நான் வணங்கும் தாரணியே
நாளுமுன்னை பணிகின்றேன் நல்ல வரம்
தாருமம்மா.

கு லக்ஷ்மணன்
யா/ கனகரத்தினம் ம.ம.வி.
க.பொ.த(உ/த)


# சுயேச்சை குழு இல-3 (ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி)

★ முழுமை பெற்ற புற்றுநோய் ஆசுப்பத்திரியை யாழ். மாவட்டத்தில் நிறுவுவோம்.

★ முற்று முழுதாக தாய்க்குலத்தின் சிறப்பிற்காக பெண் டாக்டர்களைக் கொண்ட "மகப்பேறு மருத்துவ மனையை" நிறுவுவோம்.

முதன்மை வேட்பாளர்

## வேல்முருகு தங்கராசா





உங்கள் வாக்கைத் தொலைபேசிக்கே தந்திடுங்கள்

(இ-030)

## மணவீடு பிணவீடானது

# மணமகள் உட்பட 45பேர் துடிதுடித்துப்பலி

(காபூல்)

மணவீட்டில் கட்டடம் இடிந்துவீழ்ந்ததில் மணமகள் உட்பட 45 பேர் துடிதுடித்துப் பலியாகினர்.

ஆப்கானிஸ்தானில் இடம்பெற்ற இப்பரிதாப சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

திருமணவைபவம் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை, திடீரென அக்கட்டடம் இடிந்துவீழ்ந்தது.

இதனால்மணமகள்உட்பட திருமணவைபவத்தில் கலந்துகொண்ட 45பேர் உயிரிழந்தனர்.

15 பேர் படுகாயங்களுக்கு உள்ளாகியநிலையில் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவர்களிலும், காயமடைந்தவர்களிலும் பலர் பெண்களும் சிறுவர்களும் என அறியமுடிகிறது.

இதேவேளை,

திருமணம் நடைபெற்றுக்கொண்டிருந்த கட்டடம் இடிந்து விழக்கூடிய பழமைவாய்ந்த கட்டடம் அல்லவென்பது உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் சதிவேலை காரணமாக இருக்கலாமா எனும் ஊகங்கள் எழுந்துள்ளன. (உ)

# இஸ்ரேலியர்-பலஸ்தீனர் மோதல்

# 10 சிறுவர்கள்உட்பட 29 பேர்பலி

(ஜெருசலேம்)

இஸ்ரேலியப் படையினருக்கும் பலஸ்தீன பொதுமக்கள் மற்றும், பொலிஸாருக்கும் இடையே அண்மையில் நடந்த மோதல்களில் 10 சிறுவர்கள்உட்பட 29பேர் கொல்லப்பட்டனர்.

கடந்த 4 வருடங்களில் இடம்பெற்ற மோதல்களில், மிகவும் மோசமான பயங்கர மோதல் இதுவென அரசியல் நோக்கர்கள் வர்ணித்துள்ளனர்.

இதேவேளை, இஸ்ரேலிய பலஸ்தீன அதிகாரிகள், மோதல்களை நிறுத்த இணங்கியிருப்பதாக, தனித்தனியாக அறிக்கைகள்மூலம் தெரிவித்துள்ளனர்.

எனினும் வட இஸ்ரேலில் தொடர்ந்தும் மோதல்கள் இடம்பெற்றுவருவதாக தெரியவருகிறது. (உ)

## தேர்தலை நீதியாக நடத்தக்கோரி எதிர்க்கட்சியினர் ஆர்ப்பாட்டம்

### பலாரஸ் நாட்டில் சம்பவம்

(பின்ஸ்)

இம்மாதம் 18ஆம் திகதி பலாரஸ் நாட்டில் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தல் நீதியாகவும், நியாயமாகவும் நடத்தப்படவேண்டும், எனக்கோரி அந்நாட்டு எதிர்க்கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

இவ்வார்ப்பாட்டத்தில் ஆயிரக்கணக்கான எதிர்க்கட்சி ஆதரவாளர்கள்கலந்துகொண்டு, ஆளும் அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர். (உ)

### அமைச்சரவையிலிருந்து வெளியேறிய

# முக்கிய புள்ளியை சமாதானப்படுத்த இந்தியப்பிரதமர் அதீத ஆர்வம்

(புதுடில்லி)

மத்திய அமைச்சரவையில் இருந்து வெளியேறியுள்ள மம்தாபனர்ஜியை சமாதானப்படுத்தும் நடவடிக்கையில் இந்தியப் பிரதமர் வாஜ்பாய் ஈடுபட்டு வருகிறார்.

இதன் ஒரு கட்ட நடவடிக்கையாக, தேசிய ஜனநாயகக் கூட்டணியின் ஒருங்கிணைப்பாளரும், மத்தியபாதுகாப்புத்துறை அமைச்சருமான ஜோர்ச் பெர்னான்டஸை கடந்த சனிக்கிழமை கல்கத்தா அனுப்பி வைத்துள்ளார்.

மம்தாபனர்ஜி அஜித்குமார் பாஞ்சா, மற்றும் திருநாமூல் காங்கிரஸ் மூத்த தலைவர்களைச் சந்தித்து ஆலோசனை நடத்தி அரசின் நிலைப்பாட்டை விளக்குவார் என தெரியவருகிறது.

இதேவேளை, பதவி விலகினாலும், மத்திய அமைச்சரவைக்கு என்றும் ஆதரவளிப்பேன் என திருமதி மம்தா பனர்ஜி தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டதை ஆட்சேபித்து மம்தா பனர்ஜி, மற்றும் அஜித் பாஞ்சா ஆகியோர் தமது பதவிகளை இராஜினாமா செய்தபோதிலும அவர்களுடைய பதவி விலகல் கடிதங்களை பிரதமர் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (க-உ)

## தேசிய கொண்டாட்டத்தின் போது தடையையும் மீறி ஆர்ப்பாட்டம்

### சீனாவில் சம்பவம்

(பீக்கிங்)

சீனாவில் கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற தேசிய தினக்கொண்டாட்டத்தின் போது பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

சதுக்கத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்த போதும் கூட தடையை மீறி இவ் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

சீனாவில் சட்ட விரோத மதப்பிரிவு என அங்கீகரிக்கப்பட்ட ஸிரலின் கொங் அமைப்பினரே இவ்ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது மதத்தையும் சட்ட பூர்வமானது என அங்கீகரிக்கக் கோரியே இவ் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. (க-வை)

உலக தரிசனம்

## பெண்கள் அரசியலில் ஈடுபடுவதை முழு அளவில் எதிர்ப்பேன்

### குவைத் சபாநாயகர் சூளுரை

(லண்டன்)

குவைத்தில் பெண்கள்அரசியலில் ஈடுபடுவதை முழு அளவில் எதிர்க்கப்போவதாக அந்நாட்டு சபாநாயகர் ஜசமல் கராபி சூளுரைத்துள்ளார்,

இம் மாதம் 23 ஆம் திகதி பாராளுமன்றம் கூடும்போது இது தொடர்பான பல யோசனைகளைமுன்வைக்கப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை,

குவைத்தில் உள்ள பெண்கள் உரிமை பேணும் அமைப்புக்கள் பல ஒன்றிணைந்து, தம்மை அரசியலில் ஈடுபட அனுமதிக்கக்கோரி உயர் நீதிமன்றில் வழக்குத் தொடுத்ததும் பின்அது நிராகரிக்கப்பட்டதும் தெரிந்ததே. (உ)

## கொழும்பில் தொடர் மழை அவதி நிலையில் பொதுமக்கள்

(கொழும்பு)

கொழும்பில் தொடரும் பெருமழையால் மக்களின் அன்றாட கடமைகள் பாதிக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

இதனால் பாடசாலை மாணவர்கள் அலுவலகம் செல்வோர் தாம் செல்ல வேண்டிய இடங்களுக்குச் செல்லாது வீடுகளுக்குள்ளேயே முடங்கி இருக்கின்றனர்.

வீதிகளில் வாகன மற்றும் சன நடமாட்டம் மிகவும் குன்றிக்காணப்படுவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன், பெரும் சத்தத்துடன் இடி மின்னல் காணப்படுவதால் பொதுமக்களை அவதானமாக இருக்குமாறு வானிலை அவதான நிலையம் எச்சரித்துள்ளது.

இதேவேளை தென் மேல் பருவக்காற்றினால் தோன்றியுள்ள இவ் இடிமின்னலுடன் கூடிய பெருமழை இன்னும் சில தினங்கள் நீடிக்கலாம் என வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. (உ)

# நிலக்கரிச்சுரங்கத்தில் வெடிவிபத்து

# 100 தொழிலாளர்கள் பலி

### சீனாவில் சம்பவம்

சீன நிலக்கரிச் சுரங்கத்தில் ... யில் ஈடுபட்டிருந்த சமயம் ... றது.

## தேர்தல் கடமையில் 35ஆயிரம் பொலிஸார்

(கொழும்பு)

... தப்படவுள்ளனர்.

## சீனாவில் சம்பவம்

சீன நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட பிராணவாயு கொள்கலன் வெடிப்பினால் 100 தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்.

59 பேர்வரை சுரங்கத்தின் அடியில் சிக்குண்டிருப்பதாகவும் இவர்களை மீட்க முடியாது இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நிலக்கரிச்சுரங்கம் ஒன்றில் 244 தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருந்த சமயம் மேற்படி பிராணவாயு கொள்கலன் வெடித்தது.

இதனால் பணியில் இருந்த 100 பேர் கொல்லப்பட்டனர். ஏனையவர்களில் 85 பேர் பலத்த சிரமங்களின் மத்தியில் மேலே மீட்டுவரப்பட்டனர்.

மீதிப்பேரை மீட்டெடுப்பதில் பல சிரமங்கள் தோன்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால், உயிரோடு இருக்கும் அவர்களுக்கு வேண்டிய உணவுப் பொருட்கள் நீண்ட குழாய்கள் மூலம் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இவர்களை மேலே மீட்டெடுப்பது தொடர்பான அவசரப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சீனத் தரப்புச் செய்திகள் தெரிவித்துள்ளன. [உ]

## 35ஆயிரம் பொலிஸார்

(கொழும்பு)

எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலின் போது 35 ஆயிரம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இந்தவகையில் ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்திலும் இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

4 வாக்களிப்பு நிலையங்களை உள்ளடக்கி ஒரு இடம்பெயர் பொலிஸ் பிரிவு செயற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் தேர்தல் கடமைகளுக்காக இரண்டாயிரம் பேருந்துகள் சேவையில் ஈடுபடவிருப்பதாக இலங்கை போக்குவரத்துச்சபைத்தலைவர் தெரிவித்துள்ளார். (உ)




மானிட விடியலுக்காகவும்
மகத்தான சமாதானத்திற்காகவும் வாக்களிப்போம்!

தமிழரின் விடிவுக்கு வரதரின் சின்னம்

சுயேச்சைக்குழு – 2  X



த. சுபத்திரன் (றொபேட்) X 2

அ. வரதராஜப் பெருமாள் X 1

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி
(ஈ. பி. ஆர். எல். எவ்)

எண்ணித்துணிக கருமம்
துணிந்த பின் எண்ணுவம்
என்பது இழுக்கு

- குறள் -

# வலம்புரி

## கதிர்காமருக்கு விழுந்த அடி

27வது ஒலிம்பிக்போட்டியில் பெண் வீராங்கனை சுசந்திகா பெற்ற வெண்கலப் பதக்கம் இலங்கையின் வரலாற்றில் முக்கியமான அம்சம் என்பதை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. சுசந்திகாவின் வெற்றியால் 52 வருடங்களின் பின் இலங்கை ஒலிம்பிக்கின் பரிசுப்பட்டியலில் இடம் பெற்றுள்ளது. இது மகத்தான சாதனை. இதற்கு உரிய கௌரவம் வழங்கப்படுவதற்காக சுசந்திகா தாயகம் திரும்பும்போது செங்கம்பள வரவேற்பு அளிக்கப்படவுள்ளது.

வெண்கலப்பதக்கம் பெற்றதன் மூலம் சர்வதேச அரங்கில் ஒரு படி உயர்ந்து விட்டோம் என்ற இலங்கை அரசின் இறுமாப்புநீண்டு நிலைக்க முடியாது போயிற்று. மாறாக வெட்கித் தலை குனியுமளவிற்கு நிலைமை மோசமாகி விட்டது.

அதற்குக் காரணம் அவுஸ்ரேலியாவின் சிட்னி நகரில் இடம் பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் சுசந்திகா வழங்கிய பேட்டியாகும். இலட்சோப இலட்சம் மக்கள் கூடியிருந்த சிட்னியில் வெண்கலப் பதக்கத்தைப் பெற்று அனைவரின் பாராட்டுக்களையும் பெற்ற சுசந்திகா சர்வதேசத்திடம் பகிரங்க ஆனால் பரிதாபமான வேண்டுகோளை விடுத்துள்ளார். ''இலங்கையில் நடக்கும்கொடுமைகளால் என்னால் அங்கு வாழமுடியாது. என்னை வேறோர் நாட்டில் வாழ வகைசெய்யுங்கள்'' என்பதே அக்

# மக்கள் மனதை கொள்ளை கொண்ட;

# சிட்னி நகரின்ஒலிம்பிக் போட்டிகள்

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில்மிகவும்கோலாகலமான முறையில் ஆரம்பமான 27 வது கோடைகால ஒலிம்பிக் போட்டி 17 நாட்கள் தொடர்ந்து நடைபெற்று நிறைவுற்றது.

மிலேனியத்தின் முதலாவது ஒலிம்பிக் போட்டியினை கண்டுகளிப்பதற்கு சிட்னியின் 'ஹோம்புஷ்' அரங்குகளைகட்டியிருந்தது. உலகின் கண்களெல்லாம் சிட்னியில் விருந்துண்டு விட்டு மெல்ல மெல்ல ஏப்பம் விடுகின்றன.

1956 இல் 'மெல் பேர்ன்' நகரிலும், 21 ஆம் நூற்றாண்டு, 'சிட்னி' நகரிலுமாக இரு வேறு ஒலிம்பிக் போட்டிகளை அவுஸ்திரேலிய அரசு கண்குளிர நடத்தி முடித்திருக்கிறது.

சிட்னி ஒலிம்பிக்கில் 199 நாடுகளிலிருந்து 10 ஆயிரம் வீரர்களும், 5 ஆயிரம் வீராங்கனைகளும் கலந்து கொண்டு தூள் கிளப்பிய காட்சி கண் கொள்ளாக் காட்சி 28 வகையான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மொத்தமாக 301 தங்கம், 299 வெள்ளி 328 வெண்கலப் பதக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சிட்னி ஒலிம்பிக் தீபத்தை அவுஸ்திரேலிய நீச்சல் வீரர் 'மெடிடன் பௌட் கில்ஸ் பார்க்' ஏற்றிவைக்க, போட்டிகள் ஆரம்பமாயின. முதலாவது தங்கப்பதக்கத்தை அமெரிக்கா நாட்டைச் சேர்ந்த 'மாங்ஷீ ஜாங்ஷன்' பெற்றுக் கொள்ள, கடைசிப் போட்டியில் எதியோப்பியாவைச் சேர்ந்த 'ஹெசான் ஞ்நே' தங்கத்தைச் சுவீகரித்து தத்தம் தாயகத்துக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

ஒலிம்பிக் போட்டியின் இறுதிவரை போராடிய அமெரிக்கா வழமை போல வெற்றி வாகை சூடியது. இதில் அமெரிக்கா 39 தங்கம், 25 வெள்ளி, 33 வெண்கலமென 97 பதக்கங்கள் பெற்று வெற்றி பெற்றது.

அடுத்தடுத்த நிலைகளில் ரஷ்யா 88 பதக்கங்களையும் சீனா 59 பதக்கங்களையும், அவுஸ்திரேலியா 58 பதக்கங்களையும் பெற்றுள்ளன.

ஜேர்மன், பிரான்ஸ், இத்தாலி, நெதர்லாந்து, கியூபா, பிரித்தானியா, ருமேனியா போன்ற நாடுகள் 10ற்கும் மேற்பட்ட தங்கப் பதக்கங்களைப் பெற்று தத்தம் நாடுகளுக்கு பெருமை சேர்த்துள்ளன.

சார்க் நாடுகள் வரிசையில் இந்தியா விலிருந்து 69பேரும், பாகிஸ்தானிலிருந்து 26 பேரும், இலங்கையிலிருந்து 19 பேரும், நேபாளம், பூட்டான், பங்களதேஷ் தலா 5 பேரும், மாலைதீவிலிருந்து 3 பேரும்மாக மொத்தம் 122 வீராங்கனைகள் போட்டியில் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளனர்.

### இலங்கை நிலை

இலங்கை வீராங்கனை 'சுசந்திகா ஜெயசிங்க' ஒலிம்பிக்பதக்கம் ஒன்றினைப் பெற்று முதல் தடவையாக சாதனை நிலை நாட்டினார் பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் இலங்கையின் குறுந்தூர அதிவேகஅதிரடி ஓட்டவீராங்கனை 3 ஆவது இடத்திற்கு வந்து, வெண்கலப் பதக்கம் பெற்று பெருமை சேர்த்துள்ளமை சிறப்புக்குரியது.

இவர் வெள்ளிப்பதக்கத்திற்கான வாய்ப்பினை 0.01 செக்கனில் இழந்தமை வேதனைக்குரிய விடயம்தான்

1948 இல் லண்டனில்ஒலிம்பிக் போட்டி நடைபெற்றபோது 'டங்கன் வைற்' 400 மீற்றர் தடைதாண்டி ஓட்டப்பந்தயத்தில் வெள்ளிப்பதக்கத்தினைப் பெற்று இலங்கைக்கு பெருமை சேர்த்தமை இங்கு நினைவுறுத்தற்பாலது

### மக்களின் ஆவல்

220 நாடுகளில் நேரடியாக ஒளி பரப்பப்பட்ட ஒலிம்பிக் நிகழ்வை உலகம் முழுவதும் 370 கோடி மக்கள் தொலைக்காட்சி மூலம் பார்த்து ரசித்துள்ளனர். ஒலிம்பிக் ஒத்திகையில் 93 ஆயிரம் பேர் கலந்து கொண்டு அரங்கை மொய்த்திருந்தனர் என்றால் பாருங்களேன்.

இது மட்டுமல்ல சிட்னிநகரில் சுமார் 6 இலட்சம் தொழிலாளர்கள் ஒலிம்பிக்கின் வெற்றிக்காக கங்கணம் கட்டிக் கொண்டு பணி செய்துள்ளனர் சுருங்கக் கூறின் ''குட்டி உலகம் ஒன்று'' அவுஸ்திரேலியாவில் உருவாகியதை ஒத்திருந்தது, சிட்னி நிகழ்வு.

உலகின்கண்களை தன்பால் ஈர்ந்த சிட்னி நகரில் மூழ்கிய மக்கள் 2004ல் ''எதென்ஸ்'' நகரில் எவ்வாறு மூழ்கப் போகிறார்களோ? பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

அரங்கு அமைப்பதற்கும், விளையாட்டு வீரர்களுக்குமாக பெருந்தொகை பணத்தை அவுஸ்ரேலிய அரசு செலவு செய்தது. வண்ண வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு வாணவேடிக்கைகளும் காண்பிக்கப்பட்டது இலங்கை அரசாங்கமும் ஒலிம்பிக்போட்டி நடத்துவதற்கு சிந்தித்திருக்கும் என நினைக்கிறீர்களா? இல்லவே இல்லை. இங்கு ஒலிம்பிக் நடைபெறுவதாக இருந்தால் இலங்கைத் திருநாட்டையே விற்க வேண்டியநிலைதான்.

முல்லையூரான்

2004 இல 28 ஆவது ஒலிம்பிக் போட்டி கிரேக்க நாட்டின் ''எதென்ஸ்'' நகரில் நடைபெறவுள்ளது. 1896 இல் மார்ச், 25ம் திகதி, மாலை 3 மணி ''எதென்ஸ்'' நகரில் முதன்முதல் ஒலிம்பிக் போட்டி நடைபெற்றமை இங்குகுறிப்பிடத்தக்கது

உலகின் போதைப்பொருள் ஒழிப்புஇயக்கம், சிட்னி ஒலிம்பிக்கில் கலந்து கொண்ட சகல வீர, வீராங்கனைகளையும் கண்டிப்பான குருதிப்பரிசோதனைக்கு உட்படுத்தியமை பெருமைக் குரியது.

சிட்னி ஒலிம்பிக்கில் கலந்து விட்டு திரும்பும் குறுந்தூர ஓட்டவீராங்கனைசுசந்திகாவிற்குஇன்று கட்டுநாயக்கவிமான நிலையத்தில்வைத்துபிரதமர்ரட்ணசிறி விக்கிரமநாயக்காவினால் ''செங்கம்பள'' வரவேற்பு அளிக்கப்படும்.

## இளம் குடும்பஸ்தர் கைது

## ம. உ. ஆணைக்குழுவிடம் முறையீடு

(யாழ்ப்பாணம்)

இளம் குடும்பஸ்தர் ஒருவரை இராணுவத்தினர் கைது செய்துள்ளதாக பிரஸ்தாப நபரின் மனைவி மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறையிட்டுள்ளார்.

நாகலிங்கம் யோகதாஸ் (வயது24) என்பவரையே பருத்தித்துறையில் தோட்டத்தில் வைத்து கடந்த 29 ஆம் திகதி கைது செய்து ... விலை சொந்த இடமாகக் கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது (க-12)

## யாழ். பல்கலைக்கழகவெளிவாரி இறுதிபரீட்சைமுடிவுகள்வெளியாகின

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக

செல்வி எஸ் மாதவி
செல்வி ஆர். திருவியற்

செல்வி ஆர் துவாரகாதேவி
செல்வி எஸ். சாந்தினி

பருத்தித்துறையில் தோட்டத்தில் வைத்து கடந்த 29 ஆம் திகதி கைது செய்து உள்ளதாகவும் கைதுக்கான பற்றுச் சீட்டு வழங்கப்படவில்லை என்றும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மனித உரிமைகள் ஆணைக் குழுவினர் இக்கைது தொடர்பாக இராணுவ உயரதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளனர்.

பிரஸ்தாபநபர் மிருசு

---

நாட்டில் வாழ வகைசெய்யுங்கள்'' என்பதே அக்கோரிக்கையாகும்.

ஒலிம்பிக் பதக்கங்களைப் பெற்ற ஒவ்வொரு வீரர்களும், வீராங்கனைகளும் தாம் பிறந்த நாட்டைப் புகழ்ந்து பேச சுசந்திகா மட்டும் இலங்கையில் என்னால் வாழமுடியாது எனக்கூறியுள்ளமை இலங்கையில் நடக்கும் கொடுமைகளை, அட்டூழியங்களை உலக அரங்கிற்கு பறைசாற்றியுள்ளது.

இது, இலங்கை ஒரு பௌத்த நாடு, அங்கு பௌத்த தர்மம் ஓங்கி உயர்ந்துள்ளது. தமிழர்கள், முஸ்லிம்கள் சுதந்திரமாக வாழ்கிறார்கள் என்றெல்லாம் உலக நாடுகளில் உரக்கச் கத்திய வெளியுறவு அமைச்சர் கதிர்காமரின் பிரச்சாரத்திற்கு விழுந்த உச்சந்தலையடியாகும்.

ஒலிம்பிக் பதக்கம் பெற்ற சிங்கள- பௌத்த வீராங்கனை ஒருவர் இலங்கையில் தான் வாழ முடியாதுஎன்றும் அங்குவிளையாட்டுத்துறைக்குப் பொறுப்பாக இருப்பவர் இச்சை வெறிபிடித்தவர் என்றும் உலக அரங்கில் கூறுமளவிற்கு இலங்கை அரசாங்கத்தின் ஆட்சி இருக்குமாயின் யுத்தத்தின் பிடியில் சிக்குண்டு சுற்றிவர ஆயுதம் தாங்கி நிற்கும் ஆட்சியில் தமிழர்கள் எப்படி சுதந்திரமாகவாழ முடியும் என்பதை சர்வதேசம் உணர்ந்து கொள்வதற்கும் தமிழர்கள் வெளிநாடுகளில் அகதி அந்தஸ்து கோருவது நியாயம் என்பதில் தெளிவடைவதற்கும் சுசந்திகாவின் பேட்டி நல்லதோர் சான்றாகும்.

---

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக வெளிவாரி பிரிவினரால் நடாத்தப்படும் 1997 கல்வி யாண்டிற்கான வணிகமற்றும் கலைப்பிரிவு இறுதியாண்டுப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

கலைப்பிரிவில் இரண்டாவது வகுப்பு உயர் பிரிவில் செல்வி எஸ். ஜெயகீதா சித்தியடைந்துள்ளார்.

இரண்டாவது வகுப்பு கீழ் பிரிவில் 9 பேர் இம்முறை சித்தி பெற்றுள்ளனர். யாழ் பல்கலைக்கழக வரலாற்றில் வெளிவாரிப் பிரிவில் 9 பேர் சிறப்பு சித்தி பெற்றமை இதுவே முதல் முறை என தெரிவிக்கப்படுகிறது.

சிறப்புச் சித்தி பெற்றோர் விபரம் வருமாறு;

செல்வி எஸ். கிருஷ்ணரூபி
செல்வி சி. பத்மராணி
செல்வி பி. கதிரேசு
செல்வி எம். பிரபா
செல்வி எஸ். சிவசக்தி
செல்வி வி. சிவலோஜினி
செல்வி வி. சுமதி
திரு வி. சுந்தரராஜன்
செல்வி வி. சிவசுபித்தா
திரு. எஸ். ஆர். சத்தியேந்திரம்பிள்ளை
செல்வி. பி. சந்திரவதனி
செல்விஆர். எஃவ். ரமணி
செல்வி ஏ. யசோதா
செல்வி கே. கிருபானந்தி
செல்வி ஏ. மோகமாலனா
செல்வி எஸ் மாதவி
செல்வி ஆர். திருவியற் பெலிசியா
செல்வி எஸ். தனுஜா
செல்வி கே. விமலரஞ்சனி
செல்வி ரீ. வாசுகி
திரு. ஜி. அன்ரன்குணதயாளன்
செல்வி ஆர். பிருந்தினி
செல்வி கே. பத்மலீலா

(3-வது வகுப்பு கீழ்பிரிவு)

திரு. ரி. புதியராஜா
செல்வி பி. சிவப்பிரியா
திரு. என். சிவசந்திரன்
செல்வி ஆர் துவாரகாதேவி
செல்வி எஸ். சாந்தினி
திரு. கே. பி. அனந்தநடேசன்
திருமதி ரி. ஸ்ரீரங்கநாதன்
செல்வி எஸ். யாமினி
செல்வி கே. மஞ்சுளா
செல்வி எஸ். நிர்மலாதேவி
செல்வி எம். வசந்தமலர்
செல்வி ரி. சத்தியபாமா
திரு. எம். முராதேரன்
செல்வி பி. மோகனலஷ்மி
செல்வி. கே சந்திரவதனா

## கரவலை மீன்பிடிப்பதற்கு அனுமதி கட்டுமரம் மூலம் தொழில் செய்ய தடை

### வடமராட்சிப் பகுதியில் சம்பவம்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி மணற்காடு குடத்தனை போன்ற பகுதிகளில் உள்ள மீனவர்களிற்கு கட்டுமரங்களில் சென்று மீன் பிடிப்பதற்கு படையினர் தடைவித்துள்ளனர்.

கரவலைகள் மூலம் மீன் பிடிப்பதற்கே அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறைக்கு, தொண்டைமானாறுக்கும் இடையில் கட்டுமரத்தில் சென்று மீன் பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதே வேளை குடத்தனைக்கும் மணற்காட்டிற்கும் இடையில் கட்டுமரத்தில் சென்று மீன் பிடிக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது எனவும் மீனவர் தெரிவிக்கின்றனர்.

இதனால் கட்டுமரத்தை பயன் படுத்தி தொழில் செய்யும் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(த-43)

யுத்தத்தின் கொடுமையால்

# சீரழிந்த நிலையில் பளைப் பகுதி

# மீட்கப்படாத நிலையில் உபகரணம்

## கிளி. அரசஅதிபர் தெரிவிப்பு

(வடமராட்சிக்கிழக்கு)

தென்மராட்சியில் தொடரும் யுத்த அனர்த்தத்தை அடுத்து பளைப்பிரதேசத்தில் உள்ள பெறுமதிமிக்க உபகரணங்கள் மற்றும் நகைகள் பலவும் மீட்கப்பட முடியாமல் உள்ளதாக கிளிநொச்சி அரச அதிபர் ஐயாத்துரை கவலை வெளியிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில் அண்மையில்இடம்பெற்ற யுத்தநிலைமையால் பளைப் பிரதேசம் மிகவும் சீரழிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியின் பிரதேச சபையின் பணிமனை கட்டிடத்தின் ஒருபகுதி முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

மக்கள் பலர்தமது உடமைகளை கைவிட்ட நிலையில் உயிரினை பாதுகாப்பதன் பொருட்டு அவசரமாக இவ்விடத்தை விட்டுவெளியேறிச் சென்றுள்ளனர் என்றார். (க-த-43)

## வடமராட்சியில் ஈ. பி. டி. பி பிரச்சாரம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி, புலோலி மேற்கு, வத்தனைமழலைகள் பூங்கா மைதானத்தில் நேற்று முன்தினம் ஈ. பி. டி. பியின் தேர்தல் பிரச்சாரக் கூட்டமொன்று நடைபெற்றது.

பெருந்திரளான மக்கள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் ஈ. பி. டி. பியின்பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ். சிவதாசன், கே. வி. குகேந்திரன் மற்றும் பிரமுகரான த. சிவகுமார் ஆகியோரும் கலந்து கொண்டு மக்கள் மத்தியில் தங்கள் கட்சிக் கொள்கைகளை எடுத்துக் கூறினர். (ந - 4)

## படையினருக்கு சம்பள உயர்வு

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தினருக்கு இம்மாதம் முதல் சம்பள உயர்வாக 1000 ரூபா வழங்கப்படவுள்ளது.

இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பலகலல ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் பேச்சுவார்த்தை நடத்தியதை அடுத்தே இச் சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளது. (ந- 4)

### ஓட்டோவில்...

தனால் இக்கொலை தொடர்பாக எதையும் தீர்மானிக்க முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது;

இதேவேளை கொல்லப்பட்ட வேட்பாளர் இவ் ஓட்டோவையே வழக்கமாக பாவிப்பதாகவும் சம்பவதினம் இந்த ஓட்டோ தமிழ் பிரதேசத்திற்கு வாடகைக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## மின்னல் தாக்கி 14பேர் காயம்

(அம்பாறை)

அம்பாறை கோமாரிப் பகுதியில் நேற்று இடி மின்னல் தாக்கியதில் 14 பேர் காயமடைந்துள்ளனர்,

இப்பகுதியில் உள்ள கத்தோலிக்க தேவாலயம் ஒன்றில் மக்கள் வழிபாடு நடத்திக் கொண்டிருந்த போதே மின்னல் தாக்கியுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

இதே வேளை நேற்று முன்தினம் அக்கரைப் பற்று பகுதியில் மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழந்தது தெரிந்ததே: (வ-5)

### இளைஞன் ...

டவராவார்:

இவரிடமிருந்து சித்திரவதை செய்தே குற்றஒப்புதல் வாக்கு மூலம்பெறப்பட்டுள்ளதால் சட்ட ஒழுங்கு பின்பற்றப்படவில்லை எனக் கூறி வவுனியா மேல் நீதிமன்ற நீதிவான் எஸ். சிறிஸ்கந்தராஜா குறித்தநபரை விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார். (ந-4)

### சிறுநீர்...

துள்ளார்.

வீட்டில் இருந்து சிப்பாயின் செயலை அவதானித்த மாவட்ட நீதிபதி உடனடியாக அவரைப் பொலிஸைக் கொண்டு கைது செய்ததுடன் தடுப்புக்காவலில் வைக்கவும் உத்தரவிட்டார்;

சிறுநீர் கழித்தாலும் சிறைக்குப் போகவைக்கும் கலி காலத்தில் ''அடக்கம்'' பெரிது என்பதை சிப்பாய் இனியாவது உணர்வார் போலும். (ந)

### திருமலை...

ஈடுபட்டிருந்தார் அத்துடன் கொல்லப்பட்ட அமைச்சர் அஷ்ரப்பின் ஒருங்கிணைப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

## சுசந்திகாவுக்கு செங்கம்பள வரவேற்பு

(கொழும்பு)

சிட்னி ஒலிம்பிக்கில் வெண்கலப் பதக்கத்தைத் தட்டிக் கொண்டு இன்று இலங்கை வரும் குறுந்தூர ஓட்டராணி சுசந்திகாவிற்குகட்டுநாயக்கா விமான நிலையத்தில் 'செங்கம்பள வரவேற்பு' அளிக்கப்படவுள்ளது.

பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தலைமையில் நடைபெறவுள்ள இவ்வரவேற்பில் சிறப்பு ஊர்வலம் ஒன்றும் இடம்பெறவுள்ளது.

இதேவேளை நேற்று கொழும்பு வரவிருந்த சுசந்திகா தவிர்க்கமுடியாத காரணத்தால் இன்று வரவிருக்கின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது; (ந-4)

## கொடிகாமம் மக்கள் பெரும் கஷ்ரத்தை எதிர் நோக்கியுள்ளனர்

### சிவாஜிலிங்கம் தகவல்

(யாழ்ப்பாணம்)

நேற்றைய தினம் கொடிகாமம் பகுதிக்குச் சென்ற ரெலோ அமைப்பின் முதல்வர் சிவாஜிலிங்கம், வேட்பாளர் பத்மநாதன் ஆகியோர் அங்குள்ள மக்களின் நிலைமையை நேரில் கண்டறிந்தனர்.

முள்ளிப் பாதையூடாக மக்கள் வருவதற்குரிய வாகன வசதிகளையும் அவர்கள் வழங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது:

இதேவேளையில் கொடிகாமப் பகுதியில் உள்ளமக்கள் பெரும் கஷ்ரங்களை எதிர்நோக்குவதாகவும் சிவாஜிலிங்கம் தெரிவித்தார் (ந)

### படையினரின்...

தென்மராட்சிப் பகுதியிலிருந்து பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறுமாறு விடுதலைப் புலிகள் அறிவித்ததையடுத்து நேற்று வரை சுமார் 6000 மக்கள் இடம்பெயர்ந்து வடமராட்சி மற்றும் வலிகாமம் பகுதிகளுக்கு சென்றுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது;

இடம் பெயர்ந்து வரும் மக்களுக்கு பருத்தித் துறை பிரதேச சபைத் தலைவர் ஐ ஸ்ரீரங்கேஸ்வரன்தலைமையிலான குழுவினர்உதவிகளை வழங்கி வருவதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (ந-5)

### புலிகள்...

யாழ்.மாவட்டம்

★ லெப்டினண்ட் ஆதி (நாராயணன் ராணி) யாழ். மாவட்டம்

★ ஈழவேங்கை (அமிர்தநாதன் மடுராணி) மன்னார் மாவட்டம்

★ வவுநீதன் (செபஸ்ரியான் சந்தான் குரோஸ்) மன்னார் மாவட்டம்

ஆகிய போராளிகளும்சிறப்பு எல்லைப்படை வீரரான

★ தம்பி (சிவசிதம்பரம் இபாஸ்கரன்)

## பஸ் போக்குவரத்து ஸ்தம்பிதம்

(யாழ்பபாணம்)

தென்மராட்சிப் பகுதியில் நிலவி வரும் யுத்தச் சூழ்நிலையை அடுத்து யாழ்ப்பாணத்திற்கும் கொடிகாமத்திற்கும் இடையிலானபஸ்போக்குவரத்துச்சேவை ஸ்தம்பிதமடைந்துள்ளது:

யாழ்ப்பாணத்திலிருந்து வடமராட்சியூடாக தென்மராட்சி புறப்படும் பஸ் வண்டிகள் வரணியுடன் தமது சேவையை இடைநிறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது; (4-12)

### பிரதி...

குதலுக் குள்ளாகியதில் சப் இன்ஸ்பெக்டர்உட்பட நான்கு பொலிஸார் காயமடைந்துள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் பலியான சிறுவன் சி.சுரேஸ் என அடையாளம் காணப்பட்டுள்ளார்;

அம்பாறையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் கலந்துகொள்வதற்காக சென்ற போதே இத் தாக்குதல் சம்பவம் நேற்று பிற்பகல் 4 மணியளவில்நடைபெற்றதாகவும் இக் குண்டுத் தாக்குதல் 'ரிமோட் கொன்றோல் மூலம் நடாத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இச் சம்பவத்தையடுத்து களுவாஞ்சிக்குடி பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் சம்பவம் நடைபெற்ற இடத்தைச்சுற்றி வளைத்து தேடுதல் நடத்தியதுடன் நூற்றுக்கணக்கானோரை கைது செய்துவிசாரணைக்குட்படுத்திய தாகவும்

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை ராசா

சுன்னாகம் வரிசப்புலம் வேலுப்பிள்ளை ராசா 1/10/2000 அன்று இயற்கை எய்தினார்.

இவர் சின்னம்மாவின் அன்புக் கணவரும், கிருஷ்ணவேணி, பட்டம்மாள், வர்சலாதேவி (U.K), ரவிச்சந்திரன், பாலச்சந்திரன், உமாச்சந்திரன் (கொழும்பு) குகநாதன் (மொஸ்கோ), ஆகியோரின் பாசமிகு தந்தையும், சவுந்தரநாயகம் (ஓய்வு பெற்ற பொலிஸ் அதிபர்), துரைசிங்கம் (ஓய்வு பெற்ற அதிபர்), ஜெகதீஸன் (U.K), கருணாவதி, தவமணி, மகாலட்சுமி, ஆகியோரின் அன்பு மாமனாரும், நளாயினி (U K). றக்சாபரனன் (பொறியியலாளர் U. K), மைதிலி (கொழும்பு), சிவாகர் (விரிவுரையாளர் மொறட்டுவ பல்கலைக்கழகம்), மாலி (U.K), சாளினி (ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பலாலி), ஆதிரையன் (கொழும்பு இந்துக் கல்லூரி), பிருந்தாஜெனி (யா/ யூனியன் கல்லூரி), அதிதா, காரீசன் (U.K), யுகராஜ், பிரிய...

இந்துக் கல்லூரி), பருந்தாமஜென் (யா/ யூனியன் கல்லூரி), அதிதா, காரீசன் (U.K), யுகராஜ், பிரியங்கா (யா/ யூனியன் கல்லூரி), காமராஜ், பிரதியுஷன், நீதன் ஆகியோரின் அன்புப் பேரனும், யகேஸ்கரின் அன்புப் பூட்டனும், பூரணம்பிள்ளை, அரியநாயகம் (ஓய்வு பெற்ற அதிபர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமைக் கிரியைகள் 2.10.2000 அன்று நடைபெற்றது என்பதை அறியத்தருகிறோம்.

தகவல்
க. துரைசிங்கம்
[மருமகன்]

வரிசப்புலம்
சுன்னாகம்
(கி/849)

அஷ்ரப்பின் ஒருங்கிணைப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட எச்.எல்.எம். உபைதுல்லா மீது 96ஆம் ஆண்டுபிற் பகுதியில் திருமலை உட்துறைமுக வீதியில் வைத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட போதும் அத்தாக்குதலில் இருந்து மயிரிழையில் தப்பினார் அதன் பின்பே அவர் அரசியலில் ஈடுபட்டார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. [வ]

எல்லைப்படை வீரரான
★ தம்பி
(சிவசிதம்பரம் திபாஸ்கரன்)
யாழ். மாவட்டம்

என்பவரும் நேற்று முன்தினம் சாவகச்சேரிப்பகுதியில் ஏற்பட்ட எதிர்பாராத மோதலில்
★ இளந்தளிர்
(பிரான்சிஸ் மரியசெல்வம் விஜிதா) யாழ். மாவட்டம்

என்ற போராளிகளும் தமது தரப்பில் உயிரிழந்துள்ளதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். (ந-5)

துடன் நூற்றுக்கணக்கானோரை கைது செய்துவிசாரணைக்குட்படுத்திய தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கடந்த சனிக்கிழமை ஒட்டமாவடியிலிருந்து ஏறாவூர்நோக்கிசென்ற போது பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாவை குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டதும், கடந்த 48மணித்தியாலத்தில் நடத்தப்பட்ட இரண்டாவது குண்டுத்தாக்குதல் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

(வ)


வீணையே உங்கள் சின்னம்! சேவையே எங்கள் எண்ணம்

எந்த நேரமும் எந்த வேளையும் எம்மோடு
இருப்பவரே எங்கள் பிரதிநிதிகள் ஆதலால்
ஈ. பி. டி. பியின்வீணைக்கே
அளித்திடுவீர் உங்கள் வாக்குகளை!
(ஈ. பி. டி. பி)



(இ/736)



இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 03ஆம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.